நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 34 ஹிஜ்ரி 1440 முஹர்ரம் செப்டம்பர் 2018

இலவசம்

# ஸலாம் சிங்கப்பூர் & முயிஸ் 50 பொன் விழா 2018



# சலாம் சிங்கப்பூர்




கடந்த ஐம்பது ஆண்டுகளில் சமய வாழ்க்கையில் பாராட்டுக்குரிய சாதனைகள் நிறைந்திருப்பதை மக்களின் பார்வைக்குக் கொண்டு வருவதற்காக சலாம் சிங்கப்பூர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நமது சமூக நலனுக்குச் சமய வாழ்க்கை எப்போதும் துணை நிற்பதை உறுதிப் படுத்துவதில் நம் சமூகம் கொண்டுள்ள மனவுறுதித் திட்டத்தின் பிரதிபலிப்பு இது. எதிர்காலத் தலைமுறையினர் சீரான இந்தப் பணியைத் தொடர்வது அவசியம் என்றார் முஃப்தி.

கலந்துரையாடல் சிறப்பாக நடைபெற்றது. சிங்கப்பூர் இஸ்லாமிய சமூகத்தின் பண்பு நெறிமுறைகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று எடுத்துரைக்கப்பட்டது.

முயிஸ் 50 ஆண்டு வரலாற்றில் இடம்பெற்ற அரிய நிகழ்ச்சிகள்.

| | |
|---|---|
| *1968-1977* | அடிப்படைகள் நிறுவப்பட்ட ஆண்டுகள் |
| *1978-1987* | உறவுகளை வளர்த்து, சொத்துகளை மேம்படுத்தி, நிபுணத்துவம் உயர்த்தப்பட்ட ஆண்டுகள் |
| *1988-1997* | உத்திகளைப் பகிர்ந்துகொண்டு, நம்பிக்கையை வென்ற ஆண்டுகள் |
| *1998-2007* | அமைப்புகளை வலுவாக்கி, அடையாளத்தை உருவாக்கி, உலகமயச் சிந்தனையைத் தழுவிய ஆண்டுகள் |
| *2008- 2018* | திறன்களைக் கையாண்டு, நிறுவனங்களை அதிகமாக்கி, பங்காளித்துவத்தைப் பலப்படுத்திய ஆண்டுகள். |






# முயிஸ் 50 பொன்விழா கொண்டாட்டம்

STRIVING WITH CONFIDENCE • SERVING WITH COMPASSION

சிங்கப்பூர் இஸ்லாமிய மன்றம் முயிஸ் ஐம்பதாம் ஆண்டு பொன்விழா கொண்டாட்ட நிகழ்ச்சிகளை நடத்தியது. அதன் ஒரு பகுதியாக சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத் தொடக்கத்தில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

முஃப்தி டாக்டர் முஹம்மது ஃபத்ரிஸ் பக்கரம், முயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூஸா, டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், அமைச்சர் மசகோஸ் ஜுல்கிஃப்லி, முயிஸ் தலைமை நிர்வாக அதிகாரி அப்துல் ரசாக் மரைக்கார் ஆகியோர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

செப்டம்பர் 2018ல் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் முயிஸ் முன்கூட்டியே அறிவித்தது. பள்ளிவாசல்கள், அவற்றின் வகஃப் சொத்துகள், ஹலால் நடைமுறை, புனித ஹஜ் பயணம் முதலானவற்றை முஸ்லிம் குடும்பங்கள் நன்கு அறிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

### கல்வி கலந்துரையாடல்

செப்டம்பர் 2018 7ம் தேதி முதல் 9ம் தேதி வரை நடைபெற்ற பொதுமக்களுக்குரிய ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று "எடுஃபோரம் 2018" எனும் கல்விமுறை கலந்துரையாடல். நியூயார்க் பல்கலைக் கழக இஸ்லாமிய மைய நிர்வாக இயக்குநர் இமாம் காலித் லத்தீஃப் சிறப்புரையாற்றினார். இளையர்களின் கல்வி பற்றிய "யூத் டாக்ஃபெஸ்ட்" எனும் கருத்தரங்கமும் இடம்பெற்றது.

மூன்று நாள் விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக "பள்ளிவாசல் மாநாடு 2018" நடைபெற்றது. சிங்கப்பூர் சமூகத்தில் பள்ளிவாசல்களின் பங்கு குறித்து கலந்துரையாடப்பட்டது.

### குடும்ப தினம்

செப்டம்பர் எட்டாம் தேதி பள்ளிவாசல் ஊழியர்கள், தொண்டூழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஒருங்கிணைந்து பள்ளிவாசலில் குடும்ப விழாவைக் கொண்டாடினார்கள். அவர்களிடையே வலுவான பிணைப்பை உருவாக்குவது இவ்விழாவின் நோக்கம்.

### மூன்றாண்டு செயல் திட்டம்

முயிஸ் பொன்விழாவின் ஒரு பகுதியாக மூன்று ஆண்டு திட்டத்தின் கீழ் வசதி குறைந்த, நடுத்தர முஸ்லிம் குடும்பங்களுக்கு ஒரு மில்லியன் வெள்ளி உதவி வழங்கப்படும். சமூக நற்பணி நிபுணர்களுக்கு ஆய்வு விருது வழங்கும் திட்டத்துடன் நான்கு வட்டாரப் பள்ளிவாசல் மேம்பாட்டுத் திட்டமும் நிறைவேற்றப்படும்.





சலாம் சிங்கப்பூர் நிகழ்ச்சிக்கு நினைவுப் பொருள் தயாரிக்கும் பட்டறையில் பங்கேற்ற முயிஸ் aLive மதரஸா மாணவர்கள்.

# முயிஸ் 50 பொன்விழா பிரமுகர்கள் புகழாரம்

முயிஸ் பொன்விழாவைச் சிறப்பித்து சிங்கப்பூர் முஸ்லிம் பிரமுகர்கள் இனிய நற்செய்திகளைத் தெரிவித்து புகழாரம் சூட்டியுள்ளனர். சிலருடைய சிந்தனைகளைச் சுருக்கமாகக் கண்ணோட்டமிடலாம்.

**அமைச்சர் மசகோஸ் ஜுல்கிஃப்லி**

சமூகத்தின் தேவைகளை முயிஸ் நிறைவேற்றுகிறது. முயிஸ், மெண்டாக்கி, மெஸ்ரா ஆகிய மூன்று அமைப்புகளும் முயற்சிகளையும் வளங்களையும் ஒருங்கிணைத்து செயல்பட்டு வெற்றி பெறுவதற்கு சமூக ஒற்றுமை-கொத்தோங் ரோயாங் அவசியம் என்று சுற்றுப்புற, நீர்வள அமைச்சர் மசகோஸ் ஜுல்கிஃப்லி கூறினார்.

சிங்கப்பூரில் மலாய்/ முஸ்லிம் சமூக மேம்பாட்டிற்குரிய “M3” தொலை நோக்குத் திட்டம் வெற்றிபெற சமூகத்தின் வலுவான ஆதரவு அவசியம் என்றார் அவர்.

எடியுஃபோரம் 2018 கல்வித்துறை கலந்துரையாடல், பள்ளிவாசல் குடும்ப விழா, முஃப்தியுடன் கலந்துரையாடல் முதலான பொன்விழா நிகழ்ச்சிகளை முஸ்லிம் பிரமுகர்கள் மனம்திறந்து பாராட்டினர்.

**கடையநல்லூர் முஸ்லிம் லீக்**

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு 50 ஆண்டுகளாக அயராது பாடுபட்டுள்ள முயிஸ், மென்மேலும் பல்லாண்டுகள் முன்னோடியாகச் செயல்பட நல்வாழ்த்துகளையும் இறை பிரார்த்தனையையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் வாழ்த்துச் செய்தி வழங்கியது.

முயிஸ் பள்ளிவாசல்களை செழிப்புடன் வைத்திருப்பது சிறப்புக்குரியது என்று அச்சங்கத்தின் தலைவர் ஹாஜி நசீர் கனி வெகுவாகப் பாராட்டினார். பள்ளிவாசல்கள் தொழுகைக்கான இடம் மட்டுமே அல்ல எனும் நிலையில், சமயக் கல்வி கற்கும் இடமாகவும், பாலர் பள்ளி பன்னோக்குக் கூடம் என இதர வசதிகளையும் உள்ளடக்கிய சமூகக் கூடமாக அமைக்கப்பட்டு வருவதற்கு முயிஸ் பங்காற்றியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

**தென்காசி முஸ்லிம் சங்கம்**

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கமும் நல்வாழ்த்துகளை வழங்கியது. அரை நூற்றாண்டு காலம் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டுக்கும் அரிய சேவை வழங்கிவரும் முயிஸ் மேலும் பல்லாண்டுகள், பல இனங்கள் ஒற்றுமையாய் வாழும் நாட்டிற்கும் நம் முஸ்லிம் சமூகத்திற்கும் சிறந்த சேவையாற்றிட எங்களது நல்வாழ்த்துகள் என்று சங்கத்தின் தலைவர், செயலாளர் செயற்குழு உறுப்பினர்கள் வாழ்த்தினர்.

**ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம்**

பள்ளிவாசல்களில் மலாய் ஆங்கிலம் மட்டுமின்றி, தமிழ் மொழியிலும் பிரசங்கம் செய்ய முயிஸ் முயற்சி எடுத்து வருகிறது. இது இந்திய முஸ்லிம் களுக்குக் கிடைத்துள்ள பெரும் பாக்கியம்.

தமிழ்மொழி பேசுவோர் சமயம் சார்ந்த போதனைகளைப் புரிந்துகொள்ள இந்த முயற்சி பெரும் பங்காற்றியுள்ளது.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர் ஃபரிஹுல்லா முயிஸின் சமூக மொழிப் பணியைப் பாராட்டினார். அதன் சிறப்பான செயல்பாடுகளால் இந்திய முஸ்லிம் சமூகம் நல்ல பலன்களை அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**எஸ்.எம்.அப்துல் ஜலீல்**

மொழி இன பேதமில்லாமல் அனைத்து முஸ்லிம்களுக்கும் ஏற்ற வகையில் முயிஸ் தனது கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அமைத்துக் கொண்டுள்ளது என்று எம்இஎஸ் குழுமத்தின் தலைவரான தொழிலதிபர் எஸ்.எம். ஜலீல் கூறினார்.

ஒருங்கிணைந்த இஸ்லாமிய சமூகத்தை உருவாக்கும் நமது தேசத் தலைவர்களின் முற்போக்குச் சிந்தனையைச் செயல் படுத்துவதற்கு முயிஸ் பங்களித்துள்ளது; இந்திய முஸ்லிம் சமூகத்தின் பரிந்துரைகளையும் கருத்துகளையும் ஏற்றுக் கொண்டு தேவையானவற்றை செய்துள்ளது; நல்லிணக்கம் வளர்க்கும் சமய மன்றமானது முயிஸ் என்று அதன் ஐம்பதாண்டு நற்பணிகளை விரிவாக எடுத்துரைத்துப் பாராட்டினார் ஹாஜி அப்துல் ஜலீல்.

# நியமண நாடாளுமன்ற உறுப்பினர் இர்ஷாத்





முஹம்மது இர்ஷாத் அவர்கள் நியமன நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்றுள்ளார்கள்.

அவரைப் பாராட்டி, நல்வாழ்த்துக்களை தெரிவிக்கும் உபசரிப்பு நிகழ்ச்சியை இந்திய முஸ்லிம் பேரவை ஏற்பாடு செய்திருந்தது. அனைத்து இந்திய முஸ்லிம் அமைப்புகள் பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் இந்நிகழ்ச்சியின் கலந்துகொண்டு, முஹம்மது இர்ஷாத்திற்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# பென்கூலன் பள்ளிவாசல் மதரஸா மாணவர்களுக்கு உயர்ந்த விருது





பென்கூலன் பள்ளிவாசலில் இயங்கிவரும் மதரஸாவின் இரண்டு மாணவர்களுக்கு குர்ஆன் முழுவதையும மனப்பாடம் செய்ததற்காக சிறப்பு விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

முயிஸ் ஆதரவுடன் பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகம் ஜூன் 13 ரமலான் பிறை 20 அன்று நடத்திய நிகழ்ச்சியில் முஹம்மது ஹம்ஸாவும், அஃபீஃப் முஹம்மது ரய்யானும் ஹாஃபிழ் பட்டம் பெற்றனர்.

உயர்நிலை மூன்றில் பயிலும் அஃபீஃப் முஹம்மது ரய்யானுக்கு வயது 14, மாணவர் முஹம்மது ஹம்ஸாவின் வயது 13.

அஃபீஃப் முஹம்மது நாலரை ஆண்டிலும், முஹம்மது ஹம்ஸா ஐந்தரை ஆண்டுகளிலும் குர்ஆனை மனப்பாடம் செய்தனர் என்று இமாம் கலீல் அஹமது தெரிவித்தார்.

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஆதரவு பெறறோர்களின் அரவணைப்பு ஆகிய மூன்றும் மாணவர்களின் இந்தத் தேர்ச்சிக்கு ஆதாரம் என்று பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் முஹம்மது ரஃபீக் கூறினார்.

மனப்பாடம் செய்வதால் மாணவர்களின் மனன ஆற்றலும், கற்றல் திறனும் அதிகரிக்கின்றன. பல்வேறு அம்சங்களில் அறிவுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு அது வாய்ப்பளிக்கிறது என்று பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் தலைவரான எம்இஎஸ் குழுமத் தலைவர் எஸ்.எம். அப்துல் ஜலீல் தமது உரையில் குறிப்பிட்டார்.

ஏட்டுக்கல்வித் தேர்ச்சியுடன் சமயம் சார்ந்த கல்வியிலும் சிறந்து விளங்க முடியும் என்பதற்கு இவர்கள் எடுத்துக்காட்டு. ஹாஃபிழ் பட்டம் பெற்ற இரு மாணவர்களும் தொழுகையை வழிநடத்தக்கூடிய ஆற்றல் படைத்தவர்களாகவும், சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகத்திற்கு முன்மாதிரியாகவும் திகழ்வார்கள் என்றும் எஸ.எம். ஜலீல் கூறினார்.

முயிஸ் அதிகாரிகள், பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகிகள், இமாம்கள், மாணவர்களின் பெற்றோர்கள், முதலானோர் இந்த நிகழ்ச்சிக்கு வருகையளித்துச் சிறப்பித்தனர்.



அஃபீஃப் முஹம்மது ரய்யான்



முஹம்மது ஹம்ஸா

# சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் நிகழ்ச்சிகள்



தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் மஸ்ஜித் அல் முத்தகீன் பள்ளியில் நடத்திவரும் மதரஸாவில் பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா குறிப்பிடத்தக்கது.

மதரஸா மாணவர்களும், பெற்றோர்களும் 22-7-2018 ஞாயிறு மதியம் ஒரு மணி முதல் மாலை 6 மணி வரை, சிங்கப்பூர் கார்டன்ஸ் பை தெ பே பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு நடைபெற்ற வண்ணமயமான மலர் மற்றும் தோட்டக் கண்காட்சியை அவர்கள் கண்டு மகிழ்ந்தனர்.

பல வகை காய்கறிகள் விளைவிக்கும் முறையும் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றன.

மாணவர்கள் பெற்றோர்களுடன், தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் துணைத் தலைவர் ஹாஜி முஹம்மது ஜாஃபர், உஸ்தாத் அசன் அலி, உஸ்தாதா ஆமினா ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பது.




அங்மோகியோ மஸ்ஜித் அல் முத்தகீன் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் கடந்த நவம்பர் 25 (25.11.2018) ஞாயிற்றுக்கிழமை அன்று சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் ஏற்பாட்டில் மாபெரும் மீலாத் விழா சங்கத்தின் தலைவர் ஹாஜி ஹஸன் மசூத் அவர்களின் தலைமையில் நடந்தேரியது. அதில் ஆரம்பமாக அல் மதரஸா நூருல் இஸ்லாம் மாணவர் ஆமிர் ஷரீஃப் கிராஅத் ஓதினார். சங்கத்தின் செயலாளர் ஹாஜி முஹம்மது இஸ்ஹாக் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தலைவரின் தலைமை உரையை தொடர்ந்து, அல் மதரஸா நூருல் இஸ்லாம் மாணவர்களின் பல படைப்புகள் இடம் பெற்றன. பொதுமக்கள், பல சமூக ஆர்வலர்கள், மற்றும் சமுதாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். இவ்விழாவில் தலைவர் ஹாஜி ஹஸன் மசூத் அவர்கள் பல தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்வி உபகார நிதி மற்றும் மதரஸாவில் தொண்டூழியம் புரியக்கூடியவர்களுக்கு சான்றிதழும், ஊக்கத்தொகையும் வழங்கினார்கள். இறுதியில் சங்கத்தின் உஸ்தாத் மௌலானா மௌலவி ஹாபிழ் அசன் அலி ஃபைஜி அவர்களின் பயான் நடைபெற்றது. அதை தொடர்ந்து சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க துணைத்தலைவர் ஹாஜி முஹம்மது ஜாஃபர் அவர்கள் நன்றி உரை யாற்ற துஆ வுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.



# பள்ளிவாசலில் சொற்பொழிவு - பரிசுத்தம்



சவுத் பிரிட்ஜ் சாலை ஜாமியா சூலியா பள்ளிவாசலில் நடைபெற்ற பரிசுத்தம் சமயச் சொற்பொழிவு சிறப்புக்குரியது.

பள்ளிவாசல் மௌலவி ஹாஃபிழ் ஷேக் முஹம்மது 15.7.2018 காலை 11 மணி முதல் இரண்டு மணி நேரம் உரையாற்றினார் .

சொர்க்கத்தின் திறவுகோல் பூரணமாக இருப்பதற்கு தொழுகையே ஆதாரம், சுத்தமில்லாத தொழுகை ஏற்றுக்கொள்ளப் படாது, நபி பெருமானாரின்(ஸல்), ஹதீஸ் நன்மொழிகளும், திருக்குர்ஆன் வசனங்களும் கூறுவதை அவர் வ்விரிவாக எடுத்துரைத்தார்.

உடல் சுத்தம் உடைசுத்தம் உள்ளத்தின் சுத்தம் இடச்சுத்தம் ஆகிய நான்கும் நிறைவான தொழுகைக்கு ஆதாரமானவை சலாம் சொல்லும் போதும் இந்த சுத்தம் அவசியம்.

குர்ஆன் பகறா அத்தியாய வசனங்கள் சுத்தம் மற்றும் கல்வித் திறனை வலியுறுத்துகின்றன. அவற்றை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும். உள்ளப் பரிசுத்தம் உள்ளவர்களால் எல்லா பரிசுத்த நெறிமுறைகளையும் செயல்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாம் சுத்தமாக இருந்தால்தான் நம் வீடு சுத்தமாக இருக்கும், நமது பள்ளிவாசல்கள் மிகச் சுத்தமாக இருக்கும், அதனால் நாம் அசுத்தத்திற்கு ஆளாகிவிடக்கூடாது.

சுத்தத்தின் அவசியத்தை அண்ணல் நபி பெருமானார்(ஸல்) எடுத்துரைத்துள்ளதை அனைவரும் அறிவோம்.

சுத்தம் ஈமானின் ஒரு பகுதி, சுத்தமில்லாமல் தொழப்படும் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படாது, ஒளுவை(அங்கசுத்தியை) பூரணமாகச் செய்யுங்கள், குதிகால் வரை சுத்தம் செய்யுங்கள் என்பது நபிமொழி என்று தமது உரையில் விளக்கினார் மௌலவி ஹாஃபிழ் ஷேக் முஹம்மது காஷிமி.



ஸலாம் சிங்கப்பூர்
மெய் நிகர் கண்காட்சி

# முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்) மகளிர் கருத்தரங்கம்



சிங்கப்பூரின் 53வது தேசிய நாளை முன்னிட்டு பெண்களே! சாதிக்கலாம் வாங்க! என்ற கருப்பொருளில் மகளிர் கருத்தரங்கிற்கு முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்) சமூக நல்லிணக்க சேவை அமைப்பு ஆகஸ்ட் 12ம் தேதி ஞாயிறு காலை ஏற்பாடு செய்திருந்தது.

முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்) துணைத்தலைவர், ஹாஜி அ. முஹம்மது பிலால் கருத்தாளர்களை அறிமுகம் செய்து, வருகையாளர்கள் வரவேற்று துவக்கவுரை நிகழ்த்தினார்.

பெண்களே! சாதிக்கலாம் வாங்க! என்ற தலைப்பில் திருமதி ஹேமா பிரபாகரன் பல்வேறு கருத்துக்களை உதாரணங்களோடும், படங்கள் மூலமாகவும் விவரித்து பெண்களை சாதனை செய்ய அழைத்ததோடு, அவர்களுக்கு ஆதரவு தர ஆண்களை கேட்டுக் கொண்டார்.

அடுத்து கருத்துரைத்த திருமதி ஹேமலதா மித்ரா “குடும்பப் பெண்களின் சவால்களும் சமாளிப்பும்” என்ற தலைப்பில் குடும்பப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்களை பட்டியலிட்டு, அதற்கான எளிய தீர்வுகளை தந்தார். அத்தோடு மத, இன நல்லிணக்கத்தை சிங்கப்பூரின் முதல் பிரதமர், அமரர் லீ குவான் இயூ கட்டியழுப்பியது போல், பெண்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பாலியல் நல்லிணக்கத்தை கற்றுத்தர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

லிஷா பெண்கள் பிரிவு தலைவர் திருமதி ஜாயஸ் கிங்ஸ்லி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பெண்கள் எவ்வாறெல்லாம் தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என தன் அனுபவங்களை பகிர்ந்து நிகழ்ச்சிக்கு அழகு சேர்த்தார்.

கருத்தரங்கத்தின் நிறைவுரை ஆற்றிய மூத்த சமூக அடித்தள தலைவர், முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்) தலைவர் ஹாஜி மு. ஜஹாங்கீர், பெண்களின் தன்னலமற்ற தியாகம் மற்றும் பெண்களின் உயர் பண்புகளை எடுத்துரைத்தார்.

முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்) சமூக நல்லிணக்க சேவை அமைப்பின் ஆலோசகரும், பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகக்குழு துணைத்தலைவர் ஹாஜி எம்.ஒய். முஹம்மது ரஃபீக் தேசிய கீதம் பாடி, தேசிய பற்றுறுதி நிகழ்வை நடத்தினார்.

ஜனாப் காதர் முஹைதீன், ஜனாப் முஹம்மது அலி ஆகியோரின் பாடல்கள் உற்சாகம் தந்தது.



# சிங்கப்பூர் பொதக்குடி குடும்பங்களின் ஒன்று கூடல்



சிங்கப்பூர் பொதக்குடி சங்கம் ஐந்தாம் ஆண்டு குடும்ப ஒன்று கூடலை பாசிரிஸ் பூங்காவில் நடத்தியது. கடந்த (14-10-2018)ஞாயிறு அன்று கொட்டிய மழையையும் பொருட்படுத்தாமல் அனைவரும் குதுகலமாக கலந்து கொண்டனர். காற்பந்து, மேசை விளையாட்டுகள், உள்ளத்தைத்திறங்கள் ரொக்க பரிசை அள்ளுங்கள், போன்ற பல போட்டிகள் காலை முதல் மாலை வரை நடைபெற்றன.

சென்ற கல்வியாண்டில் அதிக மதிப்பெண்கள் பெற்று சிறப்பாக தேர்ச்சி அடைந்த 11 மாணாக்கர்களுக்கு PAS கல்வி விருதுகள் வழங்கப்பட்டது.

முஸ்லிம் லீக் சிங்கப்பூர் சமூக நல்லிணக்க சேவை அமைப்பின் தலைவர் புதிய நிலா மு. ஜஹாங்கீர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்தினார்.

பொதக்குடியை சேர்ந்த மக்கள் தீவு முழுவதும் மாமா கடைகள் என்கிற சில்லறை பொருட்கள் கடைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு மட்டுமல்லாமல் சமூக நல்லிணக்கத்திற்கும் வித்திட்டனர் என புகழாரம் சூட்டினார். மேலும் பெற்றோர் பிள்ளைகளோடு தேவையான நேரம் செலவழிக்க கேட்டுக்கொண்டதோடு சிங்கப்பூரில் வாழ்ந்த, வாழும் பொதக்குடி மக்கள் பற்றிய தகவல்கள் புகைப்படங்களுடன் ஆவணப்படுத்தும் வகையில் வரலாற்று நூலை வெளியீடு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

முன்னதாக மு. ஜஹாங்கீருக்கு சிங்கப்பூர் பொதக்குடி சங்க தலைவர் அப்துல் சுக்கூர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். துணைத்தலைவர் அப்துல் மாலிக் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். சிங்கப்பூர் வாழ் பொதக்குடி சங்கத்தினர் இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்திருந்தனர்.

## நன்றி செலுத்துதல்

நீங்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டும், அவனுக்கு நன்றி செலுத்திக்கொண்டும் இருந்தால் உங்களுக்கு வேதனை செய்து அவன் என்ன (லாபம்) அடையப் போகிறான்? அல்லாஹ்வோ (நீங்கள் செய்யும் ஒரு சொற்ப) நன்றிக்கும் கூலி கொடுப்பவனாகவும், யாவையும் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.

(அல்குர்ஆன்: 4:147)

# மலாய்/முஸ்லிம் அமைப்புகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே கூட்டுறவு ஏற்பட வேண்டும்

இஸ்லாமிய சமய மன்றம்-முயிஸ், சுய உதவிக் குழுவான மெண்டாக்கி, மக்கள் கழக மலாய் நற்பணிச் செயற்குழுக்கள் ஒருங்கிணைப்பு பேரவை மெஸ்ரா, ஆகிய மூன்று அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் லீ சியன் லூங் தேசிய தினப் பேரணி உரையில் பரிந்துரைத்துள்ளார்.

அங் மோ கியோ தொழில் நுட்பக் கல்விக் கழக மத்திய கல்லூரியில் 19-8-2018 அன்று உரையாற்றிய அவர் சுய நம்பிக்கையும் ஒத்துழைப்பும் காட்டிவரும் சிங்கப்பூரின் மலாய் முஸ்லிம் சமூகத்தினரைப் பெரிதும் பாராட்டினார். அதற்கு அடுத்தபடியாக சமூக அமைப்புகளுடன் இணைந்து தங்கள் சேவைகளை வழங்க அவர்கள் முன்வர வேண்டும் என்றும் திரு. லீ கேட்டுக் கொண்டார்.

மலாய் முஸ்லிம் சமூகத்தினர் சந்திக்கும் சில சவால்களைச் சமாளிக்க மலாய்/முஸ்லிம் அமைப்புகளுக்கும், அரசாங்கத் திற்கும் இடையே கூட்டுறவு ஏற்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். கூடுதலான பிள்ளைகள் பாலர் பள்ளிக்குச் செல்ல ஊக்குவிப்பது, இளையர்களின் நிலையை மேம்படுத்தி வழிகாட்டுவது, போதைப்பொருள், சமூகப் பிரச்சினைகளால் கைவிடப்படுவோருக்கு ஆதரவு அளிப்பது போன்றவை இதில் அடங்கும்.

மூன்று அமைப்புகளின் மூலம் கூடுதலான மலாய்/முஸ்லிம் சமூகத்தினருக்கு உதவிக்கரம் நீட்டி அனைவரையும் இன்னும் மேல்நிலைக்குக் கொண்டு போவோம் என்று பிரதமர் அழைப்பு விடுத்தார். இந்த மூன்று அமைப்புகளின் பங்களிப்பையும் திட்டங்களையும் பகிர்ந்து கொண்டு பேசினார்.

நாட்டின் பள்ளிவாசல்களை மேற்பார்வையிடுவதோடு, அவற்றுக்குத் தேவையான சமயம் தொடர்பான வழிகாட்டுதலையும் வழங்கும் முயிஸ் அமைப்பை அவர் பாராட்டினார்.

கல்வி சமூக நிகழ்ச்சிகள் மூலம் மலாய் சமூகத்துக்கு ஏற்றம் தரும் மெண்டாக்கி அமைப்பின் பங்கையும் அவர் பாராட்டிப் பேசினார். கடந்த ஆண்டுகளில் மலாய்/முஸ்லிம் மாணவர்கள் கல்வித்துறையில் காட்டியுள்ள நிலையான மேம்பாட்டுக்கு மெண்டாக்கி பெரிதும் பங்காற்றியுள்ளது என்றார் திரு லீ.

தனிப்பட்ட நிலையிலும் சரி, சமூக நிலையிலும் சரி, மலாய் சமூகத்தினர் சாதித்திருப்பதை எண்ணி கொண்டாடலாம் என்றும் அவர் கூறினார்.

“மலாய் சமூகத்தினர் தங்கள் விருப்பங்களுக்கு ஏற்பச் சாதிக்க முடிந்த ஒரு நாடாக சிங்கப்பூர் தொடர்ந்து திகழ வேண்டும். ஒற்றுமையான, வலுவான பல இன சமூகத்துடன் பங்காற்றி, ஒரே மக்கள் ஒரே சிங்கப்பூர் என்ற அடிப்படையில் முன்னேறிச் செல்வோம்” என்று மலாய் உரையை நிறைவு செய்தார் பிரதமர்.




முயிஸ் 50 பொன்விழாவை முன்னிட்டு, முயிஸ் நூல் வெளியீட்டு நிகழ்ச்சி.